**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

| **K.சந்திரசேகரன்** | **R.சந்திரசேகரன்.** | **E.சித்தையன்** |
|---|---|---|
| **தலைவர்** | **பொதுச்செயலாளர்** | **நிதிச்செயலாளர்** |


**சுற்றறிக்கை எண்: 16/2018** 11-10-2018

அன்புடையீர்,

வணக்கம். ஏற்கனவே தெரிவித்திருந்த படி இன்று காலை 11 மணியளவில் மின்வாரியத்தில் போனஸ் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் 17 சங்கங்கள் கலந்து கொண்டன. நமது சங்கத்தின் சார்பில் பொதுச்செயலாளருடன், நிதிச்செயலாளர் மற்றும் உதவிப் பொதுச்செயலாளர் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தையின் போது 8.33 சதவீதம் போனஸ் 16.67 கருணைத் தொகை ஆக மொத்தம் 25 சதவீதம் வழங்கிட வேண்டுமென்றும் அலுவலர்களுக்கும் கருணைத்தொகை வழங்கிட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தோம். பெரும்பாலான சங்கங்கள் இதே கோரிக்கையை முன்வைத்துள்ளன.

பேச்சு வார்த்தையின் போது கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு கீழ்க்காணும் கோரிக்கைகளை வலியுறுத்தினோம்.

1. ஒப்பந்தப்படி வழங்கப்படவேண்டிய 2000 LI பொறுப்புகள் 383 Spl.Gr.FM பொறுப்புகள் புதிய துணைமின் நிலையங்களுக்கு AE, JE பொறுப்புக்கள் உடனடியாக வழங்கிட வேண்டும்.
2. வாரியம் நேரடியாக தினக்கூலி தரும் ஒப்பந்த தொழிலாளருக்கு சட்டப் படி போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கிட வேண்டும்.
3. 156 துணைக் கோட்ட கணக்கீட்டு அலுவலர் பொறுப்புக்களுக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்கி நிரப்பிட வேண்டும்.
4. கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை மற்றும் முதல் நிலை இணைக்கப்பட்டாலும் அவர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய ஆண்டுயர்வினை உடனடியாக வழங்கிட வேண்டும்.
5. மத்திய அலுவலகங்களில் பணிப்பகிர்வு மற்றும் பணியாளர் அளவினை உடனடியாக சங்கங்களோடு பேசி முடிவுசெய்ய வேண்டும்.
6. MTPS அலுவலக நேரத்தை காலை 10.30 மணிமுதல் மாலை 5.15 மணிவரை மாற்றி அமைத்திட வேண்டும்.
7. தூத்துக்குடியில் நமது சங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் அலுவலக அறைக்கு உடனடியாக மின் இணைப்பை வழங்கிட வேண்டும்.

பேச்சு வார்த்தையின் போது கோரிக்கைகளை முன்வைத்து நாம் பேசிய தன்மை நிர்வாகம் மற்றும் சகோதர தொழிற்சங்கங்களின் வரவேற்பையும் பாராட்டுதலையும் பெற்றது.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்: கிளைச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள்,
மண்டலச் செயலாளர்கள்,
மற்றும் மத்திய சங்க பொறுப்பாளர்கள்.

நகல் : செய்தி மடல்.